ஸ்ரீராமஜெய

அரிநாமசங்கித்தனமெனும்,

# விஷ்ணு நாமாவளிகள்.

இவை செஞ்சி,

ஏகாம்பர முதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,



தஞ்சாவூர்,

சின்னசாமி நாயுடவர்களால்

சென்னை சூளை

ஸ்ரீலட்சுமிநாராயணவிலாசஅச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன

1895

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ அரிநாமசங்கீர்த்தனமென்னும்

# விஷ்ணு நாமாவளிகள்.

இவை செஞ்சி,

ஏகாம்பர முதலியாரவர்களால்

இயற்றப்பட்டு,

தஞ்சாவூர்,

சின்னசாமி நாயுடவர்களால்

தக்கோலம்,

இராமசாமி நாயுடு

அவர்களால் தமது

ஸ்ரீலட்சுமிநாராயணவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

*Registered Copy Right.*

1895

ஸ்ரீ



ராமஜெயம்.

# ஸ்ரீ விஷ்ணு நாமாவளிகள்

## கெருடஸ்துதி.

அரிதிருநாமா வளிதனைப்பாடவும்
வரமதாய்நாவில் வந்தருள்கூறவும்
நிரைமதிவானோர் நித்தமும்வாழ்த்தவும்
பெரியதிருவடி பதந்தனைப்போற்றுவாம.

## ஆஞ்சனேயர்—துதி

### விருத்தம்.

திருவளரும் விஷ்ணுநாமா வளியைச்சொல்ல
அருள்வளரு மாள்வார்கள் பாதமபோற்றி
தரைவளரும் பல்லோர்கள் தினமும்வாழ்த்தி
குறையகல ஆஞ்சனேயர் பாதங்காப்பே.

### விருத்தம்.

அரியெனக் கமலாலயத்தைநாடி
அரனயன்மாலோடு தேவாகூடி

முறையிடவே முகுந்தாநீமனதுகூர்ந்து
முன்வந்தாய் வானவர்க்கோர்முதலாய்நின்றாய்
கரிபியாம்பிராவணன்தன் பகையைத்தீர்த்து
கரர்த்துமேயும்பர்பழி தீர்த்தநாதா
மறைபுகழும்மாயவனே மகிமையானே
மருள்கொடுத்துவடியாரைக் காக்குந்தேவே.

ஸ்துதி நாமாவளி.

ஆஞ்சநேயக் குருவேநமஸ்து
அருள்சுரநாவினில் வந்தேற்று (1)

ஆழ்வாரடிகளை நினைந்தேடு
அரிபஜநாமா வளிபாடு (2)

வாரணனே பரிபூரணனே
வரந்தருவாய்த் திருநாரணனே (3)

அண்டர்கள்துதிபணி பூண்டவனே
அனந்தகீர்த்தனத் தாண்டவனே (4)

ஆனையைக்காத்த வருள்குகனே
ஸ்ரீயெனுங்கமலா லயத்தினனே (5)

ஹிரணியனைக் காய்ந்தவனே
சுந்திரதூணினில் வந்தவனே (6)

மங்கைலட்சுமிதிரு மணவாளா
எங்களையாட்கொள்ளுங் குணவாளா (7)

கோவிந்தனெல்லோர்க்கும் நல்லவனே
குறைகளைத்தீர்த்திட வல்லவனே (8)

நாரணவள்ளலை நாடுதலே
நம்மைதுடர்பிணி யோடுதலே (9)

ஆனையனேற்றிடும் குணசீதன்
ஆழ்வார்துதிபணி யருளபர்தன் (10)

தாமோதரனே தியாபரனே
தாண்டவகாளிங்க கிர்த்தனனே (11)

மச்சவாராக வாமனனே
மாணிலமுண்ட தியாயகனே (12)

கேசவாராமா வசுதேவா
கிருஷபசுரகதருள் மாதேவா (13)

வாவாவாநந்தகோபாலா
வாதிமூல கிருபாலீலா (14)

சித்தர்கள்போற்றிடுஞ் சீதரனே
செஞ்சியேகாமபரங் கவிக்குலனே 15



## திருமால் துதி.

### விருத்தம்.

சங்குசக்கரங்கோதண்டம் தரித்திடும் மெய்யா தூய யா, மமங்கைகளை மார்பிலவைத்த மாயவா கேயாராமா மங்களமாகப்பல்லோர்மனமகிழ்ந்தென் றும்போற்றும் மெங்களையாட்கொண்டாலும் மெம்பெருமானேபோற்றி.

### ஸ்துதி நாமாவளி.

திருமகள்மணாளனே ஓம் தேவாதிதேவா
திருமந்திரமானவெங்கள் பரனேநீவாவா 1

அருமருந்தேசுரர்மருந்தே அன்பருளவிருந்தே
ஆதிசேஷசயன வானகல்லக்கொழுந்தே 2

கரியன்றுமுறையிடநீ கர்த்தனேநீவந்தாய்
காராவைக்காய்ந்துவன்று காட்சியைநீ தந்தாய் 3

ஆனயன்முதலானவாகள் அண்டர்துயர்தீர்க்க.
அனேகவிதரூபமதாய் ஆடினின்றாய்க்களிக்க 4

பொல்லாதயிரணியன்தன் வல்லுயிரைக்காய்ந்தாய்
பிரகலாதனுக்குதிரு பாதமலரீந்தாய் 5

தசமுகன்தன்பத்துதலை தத்திடநீசெய்தாய்
தட்சணமேவிபூஷணர்க்கு பட்டமதைதரித்தாய் 6

பேயனெனுங்கம்சனைநீ மாயவனேகொன்றாய் (ய்
பெருமையுடன் யசோதைமனைவாழ்ந்திருந்தாய்நன்றா

மதியார்க்கும்மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும்மதியே
மற்றவர்க்குங்கற்றவர்க்கும் மருளளிக்கும்மருளே 7

வாழுமடியார்களுக்கு வரமருளும்வரமே
வையமிசையல்லாற்கும் வாழ்வளிக்கும்வாழ்வே 8

பொல்லார்க்கும்புண்ணியர்க்கும் புகழளிக்கும்புகழே
போதகர்க்கும்மாதவர்க்கும் பொருளாய்நின்றமகிழே()

சொல்லார்க்கும்சொல்பவர்க்கும்சொல்லளிக்குஞ்செ
ல்லே, சுகத்தோர்க்கும்தாழ்வோர்க்கும் சுகமளிக்குஞ்
சுகமே, 10

துதிப்பார்க்குந்துதியார்க்கும் துதிகொடுக்குந்துதியே
தூரவோர்க்கும்யெல்லோர்க்கும் துலங்குநவமணியே()

பஞ்சவர்க்குத்தூதுசென்ற பாரளந்தமாயா
பாவைதிரௌபதைதனக்கு துயிலளித்தநேயா 12

அட்சயமாய்பாரதத்தை அரிகுருவேனின்று
ஐவரையுங்காத்தளித்தாய் ஆதிமூலமன்று 13

காசாம்புமேனியனே கண்ணனேநீவாவா
கார்த்திடவேயடியாரை கருணைவைத்ததேவா 14

சேணோர்க்கும்ஜெகத்தோர்க்கும் சீரளிக்குஞ்சீரே
செஞ்சியேகாம்பரனைச் சித்தம்வைத்துக்காரே 15



## கண்ணன் துதி.

### விருத்தம்.

வெண்ணையுண்டவனே யெங்கள் வேதத்தின்முதலே போற்றி, கண்ணனே காளிங்கன்மேலாடியபாதாபோற்றி, விண்ணவர் சகாயனான வைகுந்தநாதாபோற்றி, பண்ணவனானயெங்கள் பரமனே போற்றிபோற்றி.

# 10

## ஸ்துதி நாமாவளி.

தயைபுரிதயைபுரி தயாநிதியே
தருணம்தருணம் குணநிதியே 1

கண்ணா கண்ணா மணிவண்ணா
கவலையகற்றிடுமலர்க்கண்ணா 2

தநியிது கதியிது தயாநிதியே
தாரையளந்தப்பெருநிதியே 3

சீதைமணம்புரிசோகரனே
சித்தர்புகழுங் கிருபாகரனே 4

நான்முகன்தனையீன்ற நாரணனே
நாலாம்பதந்தரும் பூரணனே 5

கல்லைப்பெண்ணாக்கியகாகுத்தனே
வில்லையொடித்துமணம்புரிந்தோனே 6

கோவிந்தநாமஸ்க் குருபானே
கோதைருக்மணி மனோகரனே

ஆபத்பாந்த யசவிதனே
அகிலமெலாந்தொழுமவித்தகனே 8

மாயாரகிதாமலர்க்கண்ணா
மாரனையீன்றவருள்கண்ணா

திருமாலெங்குருசெந்தேனே
திரைகடல்சயினித்திருநதோனே 10

ஆலிலைமேல்பள்ளிகொண்டோனே
அண்டர்கள்துதிபணிபூண்டோனே 11

கோபிகாரவணுகோபாலா
குவலயம்புகழ்ந்திடும்பூபாலா 12
உரியில்நவநீதமுண்டவனே
உலகினையிரண்டடியளந்தவனே 13
வாமனகேசவஹரிராமா
வாமருள்சுரந்தருள்பரந்தாமா 14
புண்ணியகோட்டிப்புரந்தரனே
புலவரெலாந்தொழும்நிரந்தரனே 15
ஆழ்வார்துதிபணிபூண்டவனே
அடிமையேகாம்பார்க்கருள்வோனே 16

இது வேறு.

கலிவிருத்தம்.

ஆதிமூலமெனக் கரிமுறையிட
நீதியாகநீர் சக்கரமேவிட
பாதைசெய் காவைவதைத்திட்
வாதைதீர்ந்து வாமதையீந்தவா.

ஸ்துதி நாமாவளி.

இச்சனனம்இச்சனனம்இச்சன்னம் இச்ச
வீண்ஜெனனம்வீண்ஜெனனம் இச்ச
நாதாகுருபோதா நவநீதாவரந்தாதா இச்ச
கெதியேதயாநிதியே சுரர்பதியேபரகெதியே இச்ச
மண்ணேயிதுபுண்ணேகதிநண்ணேதகியிண்ணே ()
ஆசைவீணாசை ஆராசைபேராசை இச்ச
பொய்யேபெண்பொய்யே சொல்வையேஇதுமெய்யே

போச்சேவிண்பேச்சேபணபேச்சேவெரும்பேச்சே()
மாயம்மெய்சாயும்வினைமேயும்இதுகாயம் இச்ச
பந்தமிதுதொந்தம் வினைசொந்தம்ஏனிந்தம் இச்ச
தள்ளுவருள்கொள்ளு வளிசொல்லுநிதந்துள்ளு ()

வேறு.

விருத்தம்.

திருமாலேயுன்னாமந் தினமுஞ்சொல்ல
தீவினையெல்லாம் விலக்கும் பேணாவிள்ள
அரிநாமாவளியதனை தினமும்பா—
ஆதிமூலங்கிருபை யகலாநிற்க
பிரவியெனுந்துயரறுத்துப் பேணிக்கார்க்க
பேரின்பவாழ்வதனைப் புகழ்ந்தளிக்க
குருவென்றேயுனையடுத்தோ மாதிமூலா
குறைதீர்த்து இதுசமயங்கார்த்திடாயே.

ஸ்துதி நாமாவளி.

ஸ்ரீஅரி அரி அரியெனப்பாடு
ஜெகத்தினிலபிறவாவழித்தேடு 1

மாதர்மக்களாசைதனைஜாடு
மந்திரம்ராமபதம்பாடு 2

ஆசைபாசமதைகொய்கொய்கொய்
அரிநாமம்மனதினில்வைய்வைய்வைய் 3

மாயஸ்தூலமிதுயித்திரேகம்
மரந்தால்போய்விடுமன்பூதம் 4

படுவதெல்லாம்பெரும்வீணாசை
பரமதயாளன்மேல்வைபூசை 5

கள்ளருடன் சேர்ந்தலையாதே
கண்ணனடியை நீ மறவாதே 6

வைதவரை கூடவையாதே
வம்புகள் செய்து பொய்மொழியாதே 7

முன்கோபக்காருடன் சேராதே
மூடர்கள் உறவினில் சாராதே 8

அலைகைகளை தொழுதலையாதே
அதுவிதகீர்த்தனை மறவாதே 9

ஏழைகள் மனம் நோக பேசாதே
எம்பெருமானை நீ மறவாதே 10


வாழ்வை சதமென்று மலையாதே
வரதராஜனடி மறவாதே 11

தூங்கையில் வாங்குற பெருமூச்சி
சுழிமாரி போனால் வெரும் பேச்சி 12

அறிந்து கொள் இத்திரேகம் நந்தவனம்
ஐம்பூதங்கள் நின்றாடும் மனம் 13

பிரிந்தால் போய்விடும் இந்த மனம்
புண்ணிய கோட்டியை தேடு தினம் 14

பாகவதர்கள் பணிசீலா
பாலன் யேகாம்பரர்க் கருள் தாராய் 15



ம் வ ரு

விருத்தம.

கல்லைப்பெண்ணாக்கியகோர் கண்ணேபோற்றி
காசாம்புமேனியனே நினாய்போற்றி
எல்லையிலாங்காதகனித்த தேவாபோற்றி
திருவியன்தன்மார்பிளங்க வரியேபோற்றி
வில்லினையேயொடித்துமணம் புரிந்தாய்போற்றி
வேதனையுற்முனிகளில் அளித்தாய்போற்றி
பல்லுயிர்த்தலைகாக்கும் பரனேபோற்றி
பட்டாபி ஸ்ரீராமஜயம ரட்சிப்பாயே.

## ஸ்துதி நாமாவளி

இராமநாமம்பாடபாடநாவுமணக்குதே
நல்லபதவிகொடுக்கவெந்தன் தலைவணக்குதே 1

பெருமாள்நாமம்பஜிக்கபஜிக்கபிணியைவிலக்குமே
பேதைமனதைதிருத்தமாக்கியருள்கொடுக்குமே 2

வினைகளெல்லாந்துலைந்துவெட்டவெளியைகாட்டுமே
விஷ்ணுநாமாவளியைபாடஅமுர்தமூட்டுமே 3

பாசபந்தமறுத்துநல்லபதவியளிக்குமே
பக்தவச்சலநாமஞ்சொல்லப்பாவந்துலையுமே 4

உலகளந்தோனைப்பணியஉணர்வுபிரியுமே
ஊழ்வினையைப்போக்கியருள்வுள்ளங்குளிருமே 5

முகுந்தன்நாமஞ்சொல்லசொல்லமுத்தியளிக்குமே
முப்பிரப்பில்செய்தவினைவிட்டுயகலுமே 6

பாராயணஞ்செய்யசெய்யபழிவிலக்குமே
பதவியென்றநாளுக்கேகவெட்டித்தூக்குமே 7

பரமஸ்மரணைப்பண்ணபண்ணபரிந்துவருகுமே
பஞ்சபாதகங்களெல்லாந்துறந்தோடுமே 8

வாலிக்கருள்மொட்சந்தந்தவனிதபாதமே
வருமைமொழித்துபதமளிக்கும்வைகுந்தமே 9

கருணைபொழியும்ராமநாமகருமபுமாகுமே
காட்சியாகயின்று ஏகாம்பரனைக்காருமே 10

### (வேறு துதி.)

### நாமாவளி.

வாடிவாடியலையுமிந்தபாழுடலைநீக்கி
வந்துவந்துபிறவாமல்வரமருளவாய்தூக்கி 1

மன மெனுமோர்பேய்குறங்கைமடக்கிவழிநிரித்தி
மாய்கையெனுங்கருக்குழியில்பிரவாவழிப்படித்தி 2

தத்துவத்தின்தவமுதலேதயவளிக்கும்பரனே
தன்னொளியாய்நின்றபறமபரமளிக்கும்பரனே

முத்திதனையளித்துகார்க்கும்மூலாதாரப்பொருளே
மூவ்வுலகமுந்தொழும்முதலாநின்றவருளே 4

தன்னைதான்றிந்தவர்க்குதயவளிக்குந்திருவே
தானுணருமூடருக்கும் தாணளிக்குந்தயவே 5


விட்டகுறைதொட்டகுறைவெளியாக்கும்வெளியே
வேதனரன்தொழுதேற்றவிளங்கிநிர்க்குமொளியே 6

படியார்க்கும்படிப்பவர்க்கும்பதவிதரும்பதமே
பாவலர்க்குங்காவலர்க்கும் பட்சம்வைப்பாய் நிதமே

வணங்கார்க்கும்வணங்குவோர்க்கு வாழ்வளிக்கும்வாழ்
வே,வல்லாற்கும்வல்லவர்க்கும்வழிகொடுக்கும்வழியே

கோவாத்னகிரியை குடைபிடித்தமாயா
கோருமடியார்கள்வினை தீர்த்தருளும்நேயா 8

திருமகிழமாயில்பூண்டதீனதயாபரனே
[illegible] ஏகாம்பரர்க்கு சேவைதந்தாரணனே 9



## வேறு, ஸ்துதி விருத்தம்.

மரமாய்முளைத்தாலு மொருதிக்குமல்லாமல் மாதவர்கள் கூட்டமெல்லாம், வந்துதிணைநேர்நிழல் பெருவாகனலதினைவல்வினைகளும நீங்கிடும், பரமாகவேயவா பண்ணிடுந்தவத்தினல் பாததூளிகள்பரக்க, பரமயோகிகளின பஞ்சமாபாதகப் பாவிகட்குப்பிள்ளையாய், பாருலகிலேவந்து படுதுயரங்களுக்கெலாம் பரிவுடன் தீர்த்தாள்வையே, பரமனேயன்றி வேறுதுணையிலையன் பாதமலர்நம்பினேனே, சாதுழிசங்கேந்துகைய னேமெய்யனேகண்ணனே ஆதிமூதலே, கம்பிதங் கண்ணீருமாகித்துதிசெய்பவர்க் கதிவிரைவிலருளுராமா.



ஆழ்வார்கள்—துதி.

ஆழ்வாராதிகள் திருநாமம்
அருள்வோரெல்லாம் பெருநாமம்

வடுகநம்பிக் கருள்நேயா
வஞ்சனை தீர்த்தருளுந் துய்யா 2

உய்யக்கோனாற் குகந்தோனே
உளமதுகுடிகொண் டிருந்தோனே 3

எம்பெருமானாய் நின்றவனே
ஏழுலகம்பணி கொண்டவனே 4

ஸ்ரீராமபிரானாய் வந்தோனே
சித்தமெலாந்தொழ நின்றோனே 5

முதலியாண்ட ஆழ்வானே
முத்தர்கள்தொழுபணி பூண்டோனே 6

கிடாம்பியாச்சி யென்குருவே
கிருபைசெய்தருளுந் தருவே 7

மதுரைக்கவிபுகழ மலர்பாதா
மங்களமாய்வரும நவநீதா 8

கொட்டியூர்நம்பியென்றேன்
மறைகளைத்தீர்க்குங் குருவென்றேன் 9

தேவப்பெருமாள் வாவெனறேன்
தீவினைதனைப் போவெனறேன 10

அளகுசிங்க ஆழ்வாரே
அரிமலர்திருவடி ஆழ்வாரே 11

பெரியத்திருமலை நம்பியரோ
பித்ரகற்றிடு மின்பனரோ 12

நம்மாழ்வார்யெங்கள் நலலவரே
நானிலத்தின்புகழ் கொண்டவரே 13

திருவாய்மொழிப்பிள்ளைத் திருநம்பி
தேடியவர்க்கெல்லா மருள்நம்பி 14

பெரியப்பட்டர் புண்ணியனே
புகழ்கோயிற்கந் தாடையனே 15

மாரனேறிநம்பி மகிழ்பரனே
மலர்பதந்தரு ளுங்குகனே 19

பெரியாழ்வார்தினம புகழ்பரனே
பிழைபொறுத்தாண்டிடும் சீதரனே 17

பெரியாழ்வாரெங்கள் பெம்மானே
பிரியம்வைத்தெந்தனை யாள்வோனே 18

வடக்குவீதிபிள்ளை வரந்தருவாய்
வையகமாய்கை யறுத்தெறிவாய் 19

திருவரங்கவெங்கள் பெருமானே
திகழொளியாய்நின்ற வெங்கோனே 20

நாதமுனிகளடி நமஸ்காரம
நாடும்பிணிதுலையும் பரிஸ்காரம் 21

திருப்பள்ளியாள்வார திருநாமம்
தினந்தினந்தொழுதிடு அருள்நாமம் 22

ஸ்ரீயாண்டாள்திரு சேவடிகீழ்
சேவோரெல்லாம் வாழடிநீழ் 23

சாந்தாடைகோழப் பண்பாட
கழாடிபணிந்தோர் கருள்கூட 24

பதரிநாராயணப்பெருமான்
பக்தர்தனக்கருளுஞ்சீமான் 25

பட்சிராசர் பதந்தனையே
பணிவாக்கெல்லாம் வினையிலையே 26

ஆளவந்தார அருள்நாமம்
அடிமலாதுதித்திட வருநேமம் 27

புண்டரிகாட்சர் புகழ்நாமம்
பெருமையாயோதூர் திருநாமம் 28

தெற்காழ்வாரின் திருவடியே
தேடிகொண்டாடித்துதியே 29

ஸ்ரீ என்கண்ணபிரான்பாதம்
சித்தத்தினில்வை யருள்வேதம 30

பெரியவாச்சாமபியாழ்வா
பேர்தனைசொல்லப் பதம்வாழ்வார் 31

லைகாரச்சாம் பிள்ளையடி
நமபியவர்க்கருள் கொள்ளையடி 32

திருமலைநம்பித் திகழொளியே
தேடினவர்க்கெல்லா மருளொளியே 33

வேதாந்ததேசிகர் வெகுநேசி
விளம்பிடவடியவர்க் கருள்நேசி 34

திருவேங்கிடத்தான் திருவடியே
திருப்பதிமலையினில் வாழ்பதியே 35

கூரகுரோத்துமர் தாளடியே
கொண்டாடித் துதித்தாடுவையே 66

மணவாளமாமுனி பெம்மானே
மனம்வைத்தருள்புரி யுந்தேனே 37

குருகைப்பிரான் குணங்குடியே
குற்றமகற்றி யாள்பதியே 38

சேனைமுதலி யாழ்வானே
செந்தமிழ்வாணனுக் கருள்வோனே 39

பொய்கையாழ்வார் புண்ணியனே
புலவருக்கருள்புரி கண்ணியனே 40

பிள்ளைலோகாச்சா ஆழ்வாரே
பிரவியகற்றிய வல்லோரே 41

பூதத்தாழ்வார் பொன்னடியே
போற்றியவர்க்கரு ளும்படியே 42

திருமலையாண்ட வருள்குருவே
தேடியேயென்முன் வருந்திருவே 43

பேயாழ்வாரின் பதம்பணிவாய்
பிறவியறுத்துநீ வழிபடுவாய் 44

வேலாஞ்சோலைப் பெருமானே
வேண்டியவர்க்கனு கூலோனே 45

மாதவபெருமான் யென்சேயோனே
மருள்தந்தாண்டிடுஞ் செந்தேனே 46

திருமங்கையாழ்வார் தனைவாழ்த்து
தீண்டியவினை யெல்லாந்துறந்து 47

நம்பிள்ளையெனும் நாயகரே
நாதன்திருவடி பூண்டவரே 48

திருப்பாணாழ்வார் திவ்விபதம்
தேடியவர்க்கெலா மருளும்பதம் 49

கோடிதாதாச் சாரியென்றே
கொண்டாடுவார்க்கருளுமின்றே 50

நாலூராச்சான் னளினபதம்
நம்பினவர்க்கு வைகுந்தபதம் 51

தொண்டரடியார் துணைபுரிவார்
தொலைபுவிமாயை தனையறுப்பார் 52

பெரிநம்பி பேரழகர்
பெம்மானடியின் சீரழகர் 53

கோவலூரு யெம்பெருமானே
கோரியமக்கள் கருள்வோனே 54

எம்பாராழ்வா ரடிவாழ்த்து
என்றும்பிணியணு காதேற்று 55

திருமிசையாழ்வார் தாழ்பாடு
திருவடிபெறலா மருள்வீடு 56

கூரத்தாழ்வார் குடிகொண்டார்
குணங்களைநீக்கி யருள்பூண்டார் 57

குருகாலப்பன் தன்னடியே
கோரிதுதிப்போர் பொன்னடியே 58

சொட்டைநம்பி நல்லவரோ
சொர்க்கப்பதந்தனை பெற்றவரோ 59

சிரியகோவிந் தப்பெருமாள்
சேவடிதந்தா னந்திருமால் 60

திருக்கச்சிநம் பியாழ்வார்
திருவருள்வோங்கி யருளீவார் 61

குலசேகர றாழ்வார்பாகம்
கொண்டாடுவோர்க்கெல்லாம்நவநீதம் 62

திருமலையாண்டார் திருவடியே
தினமதினம்பாடி சேவடியே 63

பிள்ளையுறங்கா வில்லானே
பிணிகளையொழித்திடு வல்லானே 64

மணக்கால்நம்பி மாபெருமை
மண்ணுலகக் கெலாமபெருமை 6

நம்பெருமாள்துணை நனியபதம்
நம்பினவர்க்கெல்லாம அருளுமபதம் 66

செல்வப்பிள்ளை சீர்புகழை
சித்தத்தில்வைப்போர்க் கேதுபிழை 67

ஸ்ரீரங்கநாச்சி யாளம்மாள்
செல்வமளிக்கும் பேரம்மாள் 68

திருவரங்கத் தமுதனிகே
தேடியருளும் தன்மைமிகே 69

பெரியப்பெருமாள் தன்னருளே
பாடிபாடிதொழு வருமருளே 70

ஆழ்வார்பாட்டு அருள்பாட்டு
அகிலத்தின்பாட்டெல்லாம் வீண்பாட்டு 71

சித்தம்வைத்தவர்க்கு திருப்பாட்டு
செஞ்சியேகாம்பரர்க் கருள்கூட்டு 72

வேறு துதி.

கட்டளைக்கலித்துறை.

முக்குணமாய்கையி மூவெட்டின்கீழ் மூவகையும்
இக்குணமின்றி யிலங்கிபகாலச்சுழி முனையும
நற்குணமொன்றுடை நாகமுநாராயணனுடம்பாய்ச்
சிற்குணமற்றவையென் றுரைத்தாரெங்கடேசியமே.

ஸ்துதி நாமாவளி.

கோவிந்தா வெங்கள்குறை தீர்ப்பாய்தீர்ப்பாய்
குற்றமெலா மகற்றி யருள் கார்ப்பாய்கார்ப்பாய்
மாவிந்தபதவி தன்னை யீவாய் யீவாய்
மங்கையர்தன் மாய்கைதன்னை கொய்வாய்கொய்வாய்
கூவிநாமாவளியைப் பாடச்செய்வாய்செய்வாய்
கோபத்தை மாற்றி கோரச்செய்வாய்
வேவிவள்ர் வைகுந்தவாசதேவா
மைந்தன்யேகாம்பரனைக் காக்குந்தேவா

### ஸ்துதி — கண்ணிகள்.

ஆதிமூலத்தருவேயெங்களையாட்கொளுந் திருவே
சோதனைசெய்யாமலின்று சுகமருளுங் குருவே
மாதர்வலைதனிலேசிக்கி மனமுவாடா மனமே
ம்பாதமுனதருளையோதி புகழ்தருவாய் நலமே
பிறருடநேசமதை பிரித்துவிலை விரித்து
சுத்தமுடனுந்தநாமம சொலலவருள் திருத்து
மூன்றாசையெனுமயேயை மூனவாாம லோட்டி
முகுந்தனேயுன்திருமந்திர வருளதனை யூட்டி
அண்டமெலாமளந்த திருவடியை தாக்கும
அபயமிட்டுமென்வினைகள வோடவருள் தாக்கும்
புண்டரிகாவுன்னருளை பகழ்பெறவே சாற்றி
பஜிக்குமடியார்கள்வினை பற்றறுப்பாய் கீர்த்தி
செஞ்சிலே காமபரனதனை சோரன்குவிக் கருளி
சேவடிதந்தாண்டருளும் தீவினையைக் கெல்லி

### எண்சீரடி யாசிரியவிருத்தம்.

அரியெனக்கமலாலயத்தனும் அரன்மா லனைவரு மொன்றுகூடி, அணிமாபுர பரமபதமதில்வந்தான் பொற்பதமடைந்து முறையிட்டுவேண்ட, கரியயா மிராவணன் கும்பகர்ணன் வஜ்ஜிரக் கவசமருமச்சூரா னை, காய்ந்துசங்காரஞ்செய் தேய்ந்தர சிவானவனா காய்ந்த வல்லானனெவெனினும், தெரியாமல் செய்வினை ள விட்டோமெமெ [illegible]

சேரவொட்டோமென்று போராடுதேயென்னசெய்கு வேனிராமையனே, முரிதலில்லாதவன் வலிஜிதத்தருளமங்கை மோகனே வாசுதேவா, முறையிடும்பாலர்க்கு குறையகல நின்கருணைமுத்திவழிதந்தருள்வையே.

## ஸ்துதி நாமாவளி.

அரிநாமஸ்மரணையை பாடுபாடு
அலகைகள்மற்றதெய்வம் ஜாடுஜாடு 1

கோவிந்தநாமனையே பாடுபாடு
குவலயவாழ்க்கைதனை ஜாடுஜாடு 2

கேசவநாமனைப் பாடுபாடு
கேவலநரஜென்மம் ஜாடுஜாடு 3

வாசுதேவநாமத்தைப் பாடுபாடு
வந்துவந்துபிறவாவழி தேடுதேடு 4

நாமநாமாவளிதனைப் பாடுபாடு
நமனும்வந்தணுகாமுன் தேடுதேடு 5

புண்ணியகோட்டிபதத்தைத் தேடுதேடு
பொய்யர்களுறவைநீக்கி ஜாடுஜாடு 6

கோபாலநாமந்தனைப் பாடிபாடு
குற்றமறநம்வினையை ஜாடுஜாடு 7

கண்ணன்மணிவண்ணனடி தேடுதேடு
கன்னியர்தன்மோகவலை ஜாடுஜாடு 8

என்பெருமாள்பாதமலர் தேடுதேடு
இலறவாழ்வையகற்றி ஜாடுஜாடு 9

ஆதிநாராயணனைப் பாடுபாடு
அற்பருநறவினைக்கொய்து ஜாடுஜாடு 10

அலைகடல்துயின்றவனைப் பாடுபாடு
ஆசைதனைக்கொய்தறுத்து ஜாடுஜாடு 11

அண்டமெல்லாமுண்டவனைப் பாடுபாடு
அனித்தியம்வாராமுன்வழி தேடுதேடு 12

வாமனனாய்வந்தவனைப் பாடுபாடு
வையகத்தினாசைகொய்து ஜாடுஜாடு 13

திருமாலடிகளைநீ தேடுதேடு
தீவினையெலாமறுத்து ஜாடுஜாடு 14


கரிராஜவரதனைப் பாடுபாடு
கசடருராவைநீக்கி ஜாடுஜாடு 15

எத்திராசன்பொன்னடியைத் தேடுதேடு
யேகாம்பரப்பாலன்கவி பாடுபாடு 16

ஸ்துதி விருத்தம்.

ஆனைத்து மகியென்று துதியாத நாக்குமுனை அஞ்சலிசெய்யாத கைகள், ஆனந்தசேவைதனை காணு தகண்களுநின் னாலயம்வராதகாலகள், சாணகெங்காஸ் நானம் பண்ணி திருமண்காப்பு தரிததுமரியாததே க்யும், சந்ததமுனினையாத சிந்தையுமவர்க்குநீ தந்தவா றென்னென்றுமே, பிரமனை வினவிப்படியமைக்காத விதம் பேசியதின் பிழைபொறுத்து, பிரவணசொரு பனே ஸ்ரீ திருமகள்மணாளனே பேரின்ப வழிதருகு வாய், அரனயன் முதலோர்கள் வந்தடிபணிந்தேற்

ஜம அன்பர்புகழ் வைகுந்தனே அன்புடன் யுன்னடி
யை யனுதினம்போற்றிடும் அடிமையைக்காரையனே.



ஸ்துதி நாமாவளி,

கோபாலகோபால கோலக்கொழுந்தே
கோரியதாசர்க் கருள்கொழுந்தே

அச்சுதராமா பரந்தாமா
அலமேல்மங்கை மகிழும்வாமா

தேவகிமைந்தா திருவாயா
தேவரெலாம்பணி யருள்வாயா

கோவர்தன்கிரி யெடுத்தோனே
கோபாலர்தங்களைக் காத்தவனே

சகட்டாசுர சம்ஹாரதேவா
ஜானகிமனோகர வாவாவா 5

மச்சகூர்ம அவதாரா
பலிகெருவத் தகிகாரா 6

சிம்மார புண்ணியனே
ல்லாயிரணியனைக் காய்ந்தவனே 7

ராமனை யடித்தவனே
பரநடனத்தாண்டவனே 8

பஞ்சவர்தங்களைக் காத்தவனே
பார்த்தர்க்குச்சாரதி யானவனே

கம்சனுபிதனைக் காய்ந்தவனே
காகாசூரன்கண பரித்தவனே 10

பாக்வதர்கள்பணி பூண்டவனே
பாலன்யேகாம்பரர்க்குத் தாண்டவனே 11

வேறு ஸ்துதி விருத்தம்,

உனதுசெயலில்லாம லணுவுமசையாதென்ற உண்மைதனை யெண்ணாமலே, ஊத்தையாம் பீக்தோலை மெய்யாகவேநம்பி உலகமதங்கொண்டுமென்மேல்,சினமதுமிகுத்துபாழ் தீபற்றிவேகின்ற சிந்தனையோவழிபடாமல், தீவினைக்காளாகி பாவங்கள்செய்துமே திரிந்தலைந்தழிபவர்போல், எனதுபொருள் எனதுமனை என்பந்துவர்க்கங்கள் யென்தம்பிமக்களென்றும், என்றுதும் எண்ணுவோன் எமன்வந்தழைக்கும்போதிவ ரொலாமுதவுவாரோ, கனகசப சித்ரகோபிரகிறைப்பதி

யெனக்காணுயிர் கோவிந்தனே, கருணைமழை பொ
ழிந்தின்று தருணமிது எனைக்காக்க கர்த்தனே வாசு
தேவா.



கீர்த்தன நாமாவளி.

அரிநாமாவளிதனைப்பாடு மனமே
ஆண்டவன்பொன்னடி யருள்தனைத் தேடு
காலன்பாசங்கொண்டுவீசி நம்மை
கட்டியிழுக்காமுன் கடவுளை நேசி அரி

பணந்தேடி யென்னத்திற்காச்சி உயிர்
பரிபோகும்போது உதவுமோ சீசீ அரி
பெண்டு பிள்ளைகளென்ன சுகமோ நாம்
பூட்டும் ஆடைபணிவதிலென்ன நலமோ அரி

மெத்தை மேடையாசைதள்ளு                    தினம்
மேதினியில் யெத்திரர்சன் பஜனையைச் சொல்லு  அரி

ஒருதெய்வமென்று நம்பு                    இந்த
உலகத்தில் பலமத தெய்வங்கள்             வம்பு  அரி

இல்லாத தெய்வத்தைத்                    தள்ளு ஸ்ரீ
மாடியினை கருத்தினில்                  கொள்ளு  அரி

சிலைகளை தொழுகாதே                     அரி
நாமாவளிதனை மறந்திருக்                காதே  அரி

வைதோரை கூடவையாதே                    கேளும்
அரிதனை தூஷிப்போர எதிரில்             நில்லாதே  அரி

கலியுகவாழ்வைநீ தள்ளு                   இனி
கடைதேறுமார்க்கம் பாரடி                கொள்ளு  அரி

பொய்யும்புளுகும்கொட்டாதே               சுற்ற
பேயருடனே நீவாயுங்                    கொடாதே  அரி

கடன்காரைகண்டொளியாதே                  அவர்
காசியைவாங்கிநீ மோசஞ்                 செய்யாதே  அரி

அன்னை பிதாக்களை கோரி                 நீதி
அவ்வைசொன்னமொழி மனதினில்             தேறி  அரி

எத்தொழில்செய்தாலும் நாடு               மனம
யிருக்கவேணுமென்றே கர்த்தனைத            தேடு  அரி

பாவதொழில்தனை ஜாடு                   அருள்
பாகவதருடன் சேர்ந்துநீ                 பாடு  அரி

அஞ்ஞான புத்தியை யோட்டும்              செஞ்சி
அருட்கவி யேகாம்பரர்க்கருள்             கூட்டும்  அரி

நாராயணன்பரனுமவனுக்கு நிலையடியோம்
சோராதனைத்துமவனுடம் பென்னுஞ்சுருதிகளால்
சீரார்பெருந்தகைத் தேசிகரெம்மைத்திருத்துதலால்
தீராமயலகற்றுந்திறம்பாத் தெளிவுற்றனமே. 5

ஒன்றேபுகலென றுணர்ந் தவர்காட்டதிருவருளால்
அன்றேயடைக்கலங்கொண்ட நமத்திகிரித்திருமாற்
இன்றேயிசையினிணையடிசேர்ப் பரினிப்பிறவோம்
நன்றேவருவதெல்லா நமக்குப்பரமென்றிலமே,



## வேறு ஸ்துதி நாமாவளி,

ஸ்ரீ—ஆதிமூலமே—ஹரீஹரீ
ஸ்ரீ—ஆபத்பாந்தவா—ஹரீஹரீ
ஸ்ரீ—ராமநாமமே—ஹரீஹரீ
ஸ்ரீ—ராக்ஷசகாலா—ஹரீஹரீ
ஸ்ரீ—இரணியகாலா—ஹரீஹரீ
ஸ்ரீ—ஈரேழுலகளந்தாய்—ஹரீஹரீ
ஸ்ரீ—தேவகிமைந்தா—ஹரீஹரீ
ஸ்ரீ—திருமாலெங்குரு—ஹரீஹரீ
ஸ்ரீ—கேசவமுகுந்தா—ஹரீஹரீ
ஸ்ரீ—கிருஷ்ணகோபாலா—ஹரீஹரீ
ஸ்ரீ—மச்சவராகனே—ஹரீஹரீ
ஸ்ரீ—மங்கைமனோகரா—ஹரீஹரீ
ஸ்ரீ—கோவிந்தவச்சுதா—ஹரீஹரீ
ஸ்ரீ—குன்றெடுத்தவா—ஹரீஹரீ
ஸ்ரீ—வாமனரூபா—ஹரீஹரீ
ஸ்ரீ—வாதிசேசனே—ஹரீஹரீ
ஸ்ரீ—சகலரட்சகா—ஹரீஹரீ
ஸ்ரீ—ஜானகிலோலா—ஹரீஹரீ
ஸ்ரீ—எத்திராஜரே—ஹரீஹரீ
ஸ்ரீ—ஏகாம்பரனேக்காார்—ஹரீஹரீ

### வாழி நாமாவளி.

ஆதிமூலப் பொருள்வாழி
அகிலமீரேழுந் தான்வாழி
அம்மைதிருலட் சுமிவாழி
ஆழ்வார்திருநா மம்வாழி

பெரியதிருவடி தாள்வாழி
பாடிபடித்தவர மிகவாழி
ஆஞ்சனேய ரருள்வாழி
அன்பாய்தாசர் மிகவாழி
செஞ்சியேகாம்பரம் கவிவாழி
சின்னசாமிராயுடு வாழி
ஸ்ரீமகலட்சுமி நாராயணனென
செந்தமிழ்ச்சந்தமும் வாழி
பாடிப்படித்தவர் தான்வாழி
பரிதிமதியுளரும் மிகவாழி.

ஸ்ரீமகாவிஷ்ணு நாமாவளிகள்

முற்றுப்பெற்றது.